
# வெற்றிமணி

மலர் 7 இதழ் 7

சிறுவர் மாத இதழ்



முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள்

நேயர்களுக்கு எமது தீபாவளி வாழ்த்துக்கள்

15-11-69 சதம் 30

நங்கையர் விரும்பும் நவநாகரீக

★ நகைகளுக்கும் ★ வைரங்களுக்கும்

புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

# கே. என். எம். மீரான் சாஹிப்

''தங்கப்பவுண் நகை மாளிகை''

கன்னாதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்

*Visit*

# K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANT

"SOVEREIGN PALACE"

**KANNATHIDDY** *Dial*: 585 **JAFFNA**



## வாய்வு சூரணம்

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண பித்த வாய்வுகள், கை கால் இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு-வயிற்று வலிக்குச் சிறந்தது. (பத்தியமில்லை)

150 கிராம் டின் ரூபா. 4-00

(தேவைக்கு எழுதவும்)

## வீரகேசரி மாத்திரை

ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்

100 பில்ஸ் ரூ. 25; 50—ரூ. 13, 24—ரூ. 7. (மெழுகு ரூ. 4)


(பார்சல் சார்சு தனி)

**பண்டிட்: S. V. R. கண்டர் சன்ஸ் R. I. M. P.**

அரிசிப்பாளையம், சேலம் - 9. (S. I.)

கிடைக்குமிடங்கள்:-

(1) ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன் (2) அமிர்தலால் அன் கோ. (மெடிக்கல் ஸ்ரோர்ஸ்) 146, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை- 3. (3) ராஜா மெடிக்கல், 31, தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர் கண்ட். (4) வல்லராம் 188 A, தாராவிரோடு, பம்பாய்-17



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி 15-11-69

## வருடச் சந்தா

பொங்கல் மலர்
தபாற்செலவுட்பட

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா. | 4-00 |
| இந்தியா | ரூபா. | 4-00 |
| மலாயா | $ | 4-00 |

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா. | 75-00 |
| உள் அட்டை | ரூபா. | 60-00 |
| முதற் பக்கம் | ரூபா. | 50-00 |
| உட் பக்கம் | ரூபா. | 40-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின்
15 வீதக் கழிவுண்டு

விபரங்களுக்கு எழுதுக.

வெற்றிமணி
முள்ளியவளை — இலங்கை

## பொருளடக்கம்


தலையங்கம் ... ... ... ... 3
ஓரக்கண் கடவுள் ... ... ... 4
இரக்கம் ... ... ... ... ... 6
பெருமைப் பேச்சு ... ... ... 9
கணக்கியலுக்கோர் அறிமுகம் ... 10
கவிதை அரங்கம் ... ... ... 13
விஞ்ஞானமும் மனித வாழ்க்கை: 17
முக்கிய உயிர்ச்சத்துக்கள் ... ... 19
சமய வளர்ச்சி ... ... ... ... 20
சேர்ந்து பாடுவோம் ... ... ... 23
பண்டாரவன்னியன் நினைவு ... 26
நேயர் குரல் ... ... ... ... 28
மணி மொழிகள் ... ... ... 29
கட்டுரைப் போட்டி ... ... ... 30
மாணவர் மன்றம் ... ... ... 31
மாணவர் மன்றம் பேனு நண்பர் சங்கம் 32

— வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்

மலர் 7 | சனிக்கிழமை 15-11-69 | இதழ் 7

# சுவாமி விபுலாநந்தர்

விபுலாநந்த அடிகள் எழுத்தறிந்து கலை பயின்றவர்; இன்றமிழி னியல் நூல் எத்தனை அத்தனையும் எண்ணி யாழங் கண்டவர்; பழுத்த தமிழ்ப் புலமையினோர் பேரவையையும் மிகுந்த வாங்கில அறிஞர் பேரவையையும் பணியவைக்கும் பெரும்புலவன்; சொல்வகையும், சொற்றொகையும், சொல் நடையும் உணர்ந்தவர்; சொற் சோர்வின்றிச் சொல்ல வல்லவர்; பல்வகைய நூற் கடலும் படித்துண்மை மணிகள் பலவெடுத்துத் திரட்டிவைத்த பண்டாரம் போன்றவர்; முதனூலும் வழிநூலும் மூதுரையும் தெரிந்தவர்.

கனிந்த குண நலத்தவர்; தூய நெறியாளர்; அந்தண்மையடக்கம் பூண்டு அறநெறியில் நின்றவர்; அவநெறி துறந்து தவநெறியில் தலைப்பட்ட தாவில் புகழாளன்; பாடல்கள் பலவற்றையும், யாழ்நூல், மதங்கசூளாமணி முதலிய சிறந்த நூல்களையும் ஆக்கிய அருந்தகையாளர்; தமிழன்னையின் திருத்தவச் செல்வர்.

இத்துணை இணையற்ற பெருமகனுக்குக் கிழக் கிலங்கையிற் சிலையெடுத்தது குறித்துத் தமிழ் கூறும் நல்லுலகம் பெருமிதம் அடைகின்றது. அடிகளாரை இளம் சந்ததியினர் நன்குபுரிந்து கொள்ளவேண்டும்; அவரைப் போன்று அறிஞர்களாக விளங்க வேண்டும்; அவர் வழிநின்று தமிழ்ப்பணி புரிதல்வேண்டும்.

## மாணவர் மன்ற அங்கத்தவர்களுக்கு!

பொங்கல் மலரில், அங்கத்தவர் இல. 1 இலிருந்து உங்கள் பெயர்களும், முகவரிகளும் திரும்பவும் வெளியிடவிருப்பதால், உங்கள் பெயரில் அல்லது முகவரியில் மாற்றமிருப்பின் எமக்கு அறிவிக்கவும். — ஆசிரியர்

# ஓரக்கண் கடவுள்

— இரசிகமணி கனக. செந்திநாதன் —

சாதாரண மனிதர்கள் தமக்குத் துன்பம் நேரிடும்போதெல்லாம் ''இந்தக் கடவுளுக்குக் கண்தான் இல்லையோ? எங்கள் துன்பத்தைப் பார்க்கிறாரில்லையே'' என்று அலறுவதைப் பார்க்கின்றோம். கடவுளிடம் அடிமைப்பட்ட சுந்தரமூர்த்தி நாயனார் கூடத் தமக்குத் துன்பம் நேர்ந்தபோது ''ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால் வாழாங்கிருப்பீர் திருவாரூரில் வாழ்ந்தும் போதீரே'' என்று சற்றுக் கடுமையாகக் கோபித்ததைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இங்கே கடவுளை நிந்தித்துப் பேசுவது பகுத்தறிவுள்ள மனிதர் அன்று. முற்றும் துறந்த நாயன்மாரும் அன்று. சாதாரணமான ஒரு வாழைதான் அப்படிப் பேசுகிறது. ஏன் பேசுகிறது என்று பார்ப்போம்.

செழித்துக் கொழுத்த வாழை ஒன்றின்கீழ் சில குட்டிகள் நிற்கின்றன. தாய் வாழை குலை ஈன்றவுடன் கவலையடைகிறது. அடியிலே நிற்கும் குட்டி ஒன்று ''தாயே, இன்று வாட்டமுடன் இருக்கக் காரணம் என்ன?'' என்று கேட்கிறது. தாய் வாழை பதில் சொல்கிறது:-

''மக்களைப் பெற்றால் மகிழ்வதுதான்
மானில வழக்க மானாலும்
மிக்கஅம் மகிழ்ச்சி எமக்கில்லை
விரைவினில் மரணமெனக்குவரும்''
மக்களைப் பெறவே ஒருவழியை
வகுத்த கடவுள் எம்மவர்க்கு
மிக்க இரண்டு வழி வகுத்தான்
வேதனை ஒன்றால் விளைகிறதே''

இந்தப் பதில் குட்டிக்கு விளங்கவில்லை. ''இன்னும் தெளிவாய்ச் சொல்லம்மா; எனக்கே ஒன்றும் விளங்கவில்லை'' என்று மறுபடியும் கேட்கிறது. தாய் வாழை விளக்கமாகச் சொல்கிறது.

காலாற் பெறுவேன் உங்களையே
கனியாய் இனிக்கும் குலைதனையே
மேலாந் தலையால் ஈன்றிடுவேன்
விளங்கினையா யிருவழிகளையே

பாதத்தாலே பெற்ற மக்கள்
பாலிப்பார் எம் வம்சத்தை
சேதப்படுத்தி எனைக் கொல்வாள்
சிரசாற் பிறந்த குலைமகளே''

என்று சொல்லிக் கண்ணீர் வடிக்கிறது. அது அதனோடு விடாமல் மேலும் குட்டியைப் பயமுறுத்துகிறது. ''எனக்கு மாத்திரம் இது அன்று. எம்மினச் சோதரர் யாவருக்கும் உனக்கும் இக் கதிதான் மகளே'' என்றும் கூறுகிறது. குட்டிக்கு ஒரே நடுக்கம். அது கேட்கிறது; ''தாயே இதற்கு விமோசனம் இல்லையா?... குலை ஈனும் பேறு பெறாமல் மலடாக இருந்தால் தப்பிவிடலாமல்லவா?'' என்று கேட்கிறது.

அப்போதுதான் தாய் வாழை கடவுளின் ஒரு ஓர வஞ்சனையை - ஓரக்கண் பார்வையை சுட்டிக் காட்டித் துக்கப்படுகிறது; நிந்திக்கிறது.

மானுடர் மாடா டாதியன
மலடாய் வாழச் செய்கடவுள்
ஊனமி லெங்களை மலடின்றி
ஓரக் கண்ணாற் படைத்திட்டான்

என்ற உண்மையைக் கூறுகிறது. ''வாழைக்குத்தான் ஈன்ற காய் கூற்றம்'' என்ற வரியின் விளக்கத்தை மனதில் புதுவிதமாகப் பதிய வைக்கிறார் கவிஞர். புதிய எண்ணமுள்ள கவியாக இருக்கும் இதை முடியும் இடத்திலே ஒரே தூக்காகத் தூக்குகிறார் அவர்.

தாயைக் கொல்லும் பிள்ளையிதைச்
சாமிக்கு முன்னும் படைக்கின்றார்
நேயத்துடனே மானுடர்கள்
நித்தம் போற்றிப் புகழ்கின்றார்.

இந்த ''ஓரக்கண் கடவுளைப்'' பாடியிருப்பவர் ''வளர்பிறை'' என்ற கவிதைத் தொகுதியைத் தந்து ''புதிய வண்டு விடு தூது'' மூலம் புகழ்பெற்ற கவிஞராகிய அல்வாயூர் மு. செல்லையா அவர்களாவர். அவர் அமரரான தினத்திற்கு முதல் இரவு பாடிய பாடல் இது.

# இரக்கம்

—: சி. சின்னையா புலவர் :—

இரக்கமென்பது ஒரு தெய்வீகப் பண்பு. அதற்கு வேறொரு பெயர் தேர்ந்தெடுக்கில் கருணைதான் சரியான பெயர். கடவுள் சகல ஜீவராசிகளிடத்திலும் இரக்கமுடையவராகவே இருக்கிறார். ''நினைந்துருகும் அடியாரை நைய''வைத்தருளுகின்றார் கடவுள். ஏன்? ''நில்லாமே தீவினைகள் நீங்க'' இது அப்பர் சுவாமிகள் அறிவுரை. நினைந்துருகுபவர்களிடத்தில் அவ்வளவு இரக்கம். அரிசி எவ்வளவு சத்தமிட்டு அழுதாலும் தீட்டிறவன் தவிடு போகும்வரைக்கும் தீட்டித்தான் தீர்ப்பான். மாற்றுக் குறைந்த பொன்னை உயர்ந்த மாற்று வரும்வரைக்கும் பொற்கொல்லன் சுட்டுத்தான் தீர்ப்பான். உள்ளுறுப்புக்களில் நோய் கண்டால் டாக்டர் அவனை வெட்டித்தான் வைத்தியஞ் செய்து குணப்படுத்துவான். இவைகளனைத்தும் அன்பை அடிப்படையாகக் கொண்டுதான் செயற்படுகின்றன.

மனிதர்களிலும் சிலர் இயல்பாக இரக்கமுடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் ''குருபரன்'' என்ற சிறுவனும் ஒருவன். குருபரனைக் கண்ணன் என்று செல்லமாகப் பெயரிட்டழைப்பார்கள். அவன் சின்ன வயதில் வேறு சிறுவர்களோடு கூடி விளையாடுகிற போது மற்றச் சிறுவர்கள் ஏதும் பூச்சிகளைப் பிடித்து விளையாட்டில் உபயோகிப்பார்கள். அப்போதெல்லாம் கண்ணன் குறுக்கிட்டு, பூச்சிகளை விளையாட்டில் உபயோகிக்க வேண்டாமென்றும், ஒருவாறு பூச்சிகளைப் பிடித்தாலும் அவை வருத்தமடையக் கூடியதாகவோ அல்லது இறந்துபோகக்கூடிய வகையிலோ விளையாடக் கூடாதென்றும் அறுக்கை செய்வான்.

கண்ணன் வயதுவந்து பாடசாலையிற் சேர்க்கப்பட்டான். தெய்வ சங்கற்பமாயிருக்கக்கூடும் கருணாவதியென்ற பெயரையுடைய ஆசிரியை பெயருக்கேற்ற குணம் வாய்க்கப்பெற்றவர். குருபரனுக்கு வகுப்பாசிரியையாயிருந்தார். குருபரன் வாக்கியங்களை வாசிக்கவும் கரும்பலகையில் எழுதவுங்கூடிய அறிவைப் பெற்றுவிட்டான். ஒருநாள் ஆசிரியை கரும்பலகையில் 'செய்யத்தக்கது யாது?' 'செய்யத்தகாதது யாது?' என எழுதி இதற்கு ஒரு சொல்லிற் பதில் எழுத வேண்டுமென்று கண்ணனுடைய வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு உத்தரவிட்டார். சிலர் 'நல்லது' 'கூடாதது' என்றும், சிலர் 'பொருளீட்டல்' 'வீண் செலவு' என்றும், இப்படியே பலரும் பலவாறாகப் பதிலெழுதினார்கள்.

கண்ணன் மாத்திரம் ''புண்ணியம்'' ''பாவம்'' என்று பதில் எழுதினான். எல்லோருடைய பதில்களையும் பரிசீலனை செய்த ஆசிரியை கண்ணனைக் கூப்பிட்டு அவனுடைய முதுகிலே தட்டி, பதிலெழுதிய கையைப் பிடித்து முத்தமிட்டுப் பாராட்டி வகுப்புக்கு

அனுப்பிவிட்டார். அன்று முதலாகப் புண்ணியங்கள் எவையெவை யென்று விபரமாகத் தான் ஆறிய வேண்டுமென்ற பேரவா கண்ணனுக்கு.

ஒரு நாள் புத்தகத்தில் புண்ணியங்களெவை என்ற கேள்வியும் அதற்குப் பதிலும் எழுதியிருந்ததைக் கண்ணன் வாசித்தான். புண்ணியங்களெவை – 'உயிர்களுக்கு இரங்குதல், உண்மை பேசுதல்' இவ்வாருகப் பல எழுதப்பெற்றிருந்தன. உயிர்களுக்கு இரங்குதல் உண்மை பேசுதல் என்ற இரண்டு பதில்களோடும் கண்ணன் நிறைவெய்தி மேற்கொண்டு வாசிப்பதை நிறுத்திவிட்டான். அவற்றுள் உயிர்களுக்கு இரங்குதல் என்ற முதல் வாக்கியம் கண்ணனை ஆழமாகச் சிந்திக்க வைத்துவிட்டது. 'உயிர்கள்–உயிர்கள்-உயிர்கள்' என்றே ஓயாமல் எண்ணமிட்டான். மனிதர்கள் மாத்திரமே அன்றித் தாவரம் முதலான சகல உயிர்த் தோற்றங்களுமோ என்று சிந்தித்துச் சிந்தித்து எல்லா உயிரினங்களுந்தான் என்று தீர்மானித்தான்.

அரசனுக்கு வேறு, பிரசைகளுக்கு வேறு, முதலாளிக்கு வேறு, வேலையாளுக்கு வேறு, விலங்கினங்களுக்கு வேறு, பறவைகளுக்கு வேறு, நீர் வாழ்வனவற்றுக்கு வேறு, ஊர்வனவற்றுக்கு வேறு, தாவர வகைக்கு வேறு என்று உயிர்களில் வேற்றுமை கிடையாதென்றும் பாகுபாடு உடம்புகளுக்கே யென்றும் நிச்சயஞ் செய்தான். அதனல் உயிர்த்தோற்றங்களெவைக்கும் உபகாரியாக மனிதன் இருக்கவேண்டியது கடமையென்றும் கண்ணனுணர்ந்தான்.

பாரியென்ற குறுநில மன்னன் கொழுகொம்பின்றித் தத்தளித்த முல்லைக் கொடிக்குத் தனது தேரை யுபகரித்ததும் இந்த அடிப்படையிலே தானென்றுங் கண்ணன் நிச்சயித்தான். சுவானுபூதியென்பது பிறரெவராலும் உணர்த்தப்படாமல் சில உண்மைகளைத் தாமாகவே யுணருவது ஒவ்வொரு உடலையும் உயிர் வியாபித்து நின்று இயக்குவதுபோல ஒவ்வொரு உயிரையும் அந்தரான்மாவாகக் கடவுள் உள்ளிருந்தே இயக்கியருளுகின்ருர். இயல்பாகவே இரக்க குணம் பெற்றிருந்த கண்ணனை அந்தராத்மாவான கடவுள் அந்தத் துறையில் முன்னேறக் கூடிய சூழலையு முண்டாக்கியருளினுர். நிலை பெயர்ந்து திரிகின்ற உயிர்களிடத்துள்ளது போலவே நிலையாயுள்ள தாவர இனங்களிடத்திலும் கண்ணன் இரக்க முடையவனுகத்தான் இருந்தான். சில விடயங்களில் இரக்க குணம் காரணமாகச் சமாளிக்க முடியாத சில கஷ்டங்கள் ஏற்பட்டதுமுண்டு. அந்த வேளைகளிற் கடவுள் தியானம் மாத்திரந்தான் கண்ணனுக்குக் கை கொடுத்தது. அது காரணமாகக் கண்ணனிடத்திற் கடவுட் பக்தியும் தீவிரமாக வளர்ச்சியுற்றது.

ஒருநாள் கண்ணன் பாடசாலையால் வீடு திரும்பும் வழியில் முன்னெப்போதாவது கண்டிராத ஒரு காட்சியைக் கண்ணுற்ருன். யாரோ ஒரு புண்ணிய புருடன் ஒரு நாயினுடைய பசியை ஓரளவு

தணிக்கக்கூடிய சோற்றை எச்சிலிலையுடன் வீதியோரமாக வீசியிருந்தான். பசியால் வாடி வீதி வழியே திரிந்துகொண்டிருந்த நாயொன்று முதலந்த எச்சிலிலையைக் கண்டது. அதிகம் பிந்தாமல் இரண்டு பிச்சைக்காரர்களுக்கும் அந்த எச்சிலிலை காட்சி கொடுத்தது: நாயில்லாவிட்டால் பிச்சைக்காரர்கள் தனித்தனி சொந்தங் கொண்டாடிச் சிலவேளை 'பொலிஸ்' தலையிடவேண்டி எற்பட்டாலு மேற்பட்டிருக்கும். நல்லவேளையாக நாய் எதிர்க்கட்சியானபடியால் பிச்சைக்காரர்கள் கூட்டுச் சேர்ந்துவிட்டார்கள். பசிக் கொடுமையால் நாய் தனக்கு அடி விழுந்தாலும் எந்த வகையிலும் சோற்றிலையை இழந்துவிடத் தயாரில்லை.

பிச்சைக்காரர்கள் தாங்க ளிருவரென்ற துணிவால் சோற்றிலையைத் தாங்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று நம்பிவிட்டார்கள். நாய்க்கு அதனுடைய பற்கள்தான் ஆயுதம். பிச்சைக்காரர்களுக்கு அவர்கள் வைத்திருக்கின்ற வழக்கமான தண்டாயுதங்கள்தான். சமீபமாக நின்ற கண்ணனுக்கு அதிசயந்தான் முன்னுக்கு நின்றது. அவனுக்கு மூன்று ஜீவாத்மாக்களிலும் சமத்துவமான இரக்கம் என்றாலும் நாயோடு பேசிக்கொள்ள முடியவில்லை. அதனுற் பிச்சைக்காரர்களோடு மாத்திரம் பேசினுன்.

அன்பர்களே! நாயை அடியாதேயுங்கள், உங்களுக்கு நான் சாப்பாடு தருகிறேன்: சிறிது தூரம் என்னுடன் வாருங்களென்று அன்பாகப் பிச்சைக்காரர்களை வேண்டுதல் செய்தான். இந்த அருந்தருணத்தை நாய் பயன்படுத்தித் தனது விரதப் பாரணையை முடித்துக் கொண்டது. கண்ணன் பிச்சைக்காரர் சகிதமாக வீட்டுக்குப்போய் பிச்சைக்காரர்களை வெளியே நிறுத்திவிட்டு உள்ளே போய்ப் புத்தகங்களை வைக்கவேண்டிய இடத்தில் வைத்துவிட்டுப் பின்வரும் பிரகடனத்தைத் தாயாருக்குச் சமர்ப்பித்தான்.

''அம்மா! எனது சாப்பாட்டைச் சம பங்காகப் பிரித்து இரு இலைகளில் இட்டுத்தரவேண்டும். அப்படித் தராவிட்டால் நான் இன்று சாப்பிடமாட்டேன்'' என்று கண்ணன் கண்கலக்கத்துடன் சொன்னுன். முன் எப்போதாவது நிகழாத சம்பவமானபடியால் கண்ணனுடைய தாயாருக்கு ஆச்சரியமும், கண்ணன் சாப்பிடப் பிந்துவதால் மனஸ்தாபமும் ஏற்பட்டது. உண்மையை அறியத் துடித்தாள் கண்ணனுடைய தாய். மகனை அன்பு மொழிகளாலுபசரித்து கண்ணு! இரண்டல்ல மூன்றிலைகளிலென்றாலுந் தருகிறேன். என்ன காரணத்துக்காக இப்படிக் கேட்கிருய் உண்மையைக் கூறு என்று விநயமாகக் கேட்டாள் தாயார்.

கண்ணன் கற்ற நீதி இரண்டு. அதிலொன்று உண்மை பேசுதல். அதனுல், நடந்தவைகளை உள்ளபடி கூறிக் கண்ணீர் விட்டான் கண்ணன். பிச்சைக்காரர்கள் இருவரும் ஆசைதீரச் சாப்பிட்டுக் கொண்டு கண்ணனைப் பலமுறை ஆசீர்வாதஞ் செய்தார்கள். அன்று முதல் யாரேனுமொருவருக்கு உணவு வழங்குவது கண்ணனுடைய தாயாருக்கு நியதியாக அமைந்துவிட்டது.

# பெருமைப் பேச்சு (47)

— மு. க. சுப்பிரமணியம் —

லீலா பதினெட்டு வயது நிரம்பியவளாக இருந்தாலும் குழந்தைப் பிள்ளைகளின் போக்குடையவள். லீலாவுக்குப் பல இனத்தவர்கள் வெளியூரில் இருந்தனர். தீபாவளிக்கு முதற் கிழமை தபாற்காரன் லீலாவின் வீட்டு வாசலில் நின்று விசிலை ஊதினான். லீலா ஓடிவந்தாள். ஒரு பார்சலைக் கொடுத்துக் கையொப்பம் வாங்கினான். லீலா பார்சலைக் கொண்டுபோய்ப் பிரித்துப் பார்த்தாள். உள்ளே அழகான சேலை இருந்தது. அது அவளுடைய மாமியாரால் அனுப்பப்பட்டது.

மறுதினமும் தபாற்காரன் வந்தான். இரண்டு பார்சலைக் கொடுத்தான். லீலா அவற்றைப் பார்த்தாள். ஒன்று லீலாவின் அண்ணாவாலும் மற்றது அவளின் மாமாவாலும் அனுப்பப்பட்டன. லீலா தனக்கு வந்த தீபாவளி உடுப்புகளைப் பக்கத்து வீட்டு மாலாவிடம் கொண்டுபோய்க் காட்டி ''மாலா பாரடி எனக்கு எத்தனை உடுப்புகள்! ஒவ்வொன்றும் ஐம்பது ரூபாவுக்கு மேல் பெறும். உனக்கு யார் வாங்கித் தந்தார்கள்? காட்டு பார்ப்போம்'' என்றாள். மாலா ''எனக்கு ஏன் தீபாவளிக்கு உடுப்பு? கட்டாயம் அன்றைய தினம்தான் வாங்க வேண்டுமா! அப்படிப் புதிது உடுப்பது என்றாலும் ஐந்து, பத்து ரூபாச் சட்டை போதாதா? அம்மா எனக்கு வாங்கித் தந்த சீத்தைப் பாவாடை இதோ இருக்கிறது பார். இதுதான் எனக்குப் பெரிது'' என்றாள்.

லீலா ''எனக்கு மாமா, மாமி, அண்ணா இவர்கள் வாங்கித் தந்த உடுப்புகள்போல எவருக்கும் எவரும் வாங்கிக் கொடுக்கமாட்டார்கள். யான் இவற்றை மாறிமாறித் தீபாவளியிலன்று உடுத்து அழகு பார்ப்பேன்'' என்று கூறி தன் வீட்டுக்குச் சென்று அவற்றைத் தனது பெட்டியிலே வைத்து மூடிவிட்டாள்.

தீபாவளியிலன்று காலை, குளித்துவிட்டுத் தன் புதிய ஆடையை எடுத்து உடுப்பதற்காக, பெட்டியைத் திறந்தாள். இரண்டு - மூன்று எலிகள் பெட்டிக்குள்ளிருந்து ஓடின! உடுப்புகளை எடுத்துப் பார்த்தாள். ஒன்றுமே உடுக்கக் கூடியதாக இல்லை. எலிகள், யாவற்றையும் துண்டு துண்டாக வெட்டிவிட்டன. அழுதபடி லீலா தன் தாயிடம் வந்து நடந்ததைக் கூறினாள். மாலா தன் புதுப் பாவாடையை அணிந்துகொண்டு லீலா வீட்டுக்கு வந்தாள். ''ஏன் லீலா இன்னும் உடுக்கவில்லையா?'' என்றாள். லீலா என்ன பதிலைக் கூறுவது?

# கணக்கியலுக்கோர் அறிமுகம் (18)

— வை. சி. சிவஞானம் —

**பரீட்சை மீதி**

பரீட்சை மீதி ஒரு கணக்கல்ல. ஒரு கூற்றுகும். இது ஒரு குறிப்பிட்ட கால எல்லையின் வியாபார நடவடிக்கைகளின் கணக்கு நிலையைக் காட்டும் கூற்றுகும். பரீட்சை மீதியை இரு முறைகளில் தயாரிக்கலாம். அவையாவன

1. கணக்கு மொத்தத் தொகைகளைக்கொண்டு தயாரித்தல்.
2. கணக்கு மீதிகளைக்கொண்டு தயாரித்தல்.

**கணக்கு மொத்தத் தொகைகளைக்கொண்டு தயாரித்தல்**

காசேட்டின் காசு நிரலின் பற்றுப்பாகக் கூட்டுத் தொகையையும் வரவுப்பாகக் கூட்டுத் தொகையையும் பரீட்சை மீதியில் காசுக் கணக்கு என எழுதி அக்கணக்குக்கு நேரே முறையே பற்று நிரலிலும் வரவு நிரலிலும் பதிதல் வேண்டும். இதேபோன்று வங்கி நிரலின் பற்றுப்பாகக் கூட்டுத் தொகையையும் வரவுப்பாகக் கூட்டுத்தொகையையும் பரீட்சை மீதியில் வங்கிக் கணக்கென எழுதி அதற்கு நேரே முறையே பற்று நிரலிலும் வரவு நிரலிலும் பதிதல் வேண்டும். பேரேட்டிலுள்ள ஒவ்வொரு கணக்கின் பற்றுப்பாகக் கூட்டுத் தொகைகளையும் பரீட்சை மீதியில் அவ்வக் கணக்கின் பெயருக்கெதிரே முறையே பற்று நிரலிலும் வரவு நிரலிலும் பதிதல் வேண்டும். பின் பரீட்சை மீதியின் பற்று நிரலையும், வரவு நிரலையும் கூட்ட ஒரே தொகை வரல் வேண்டும்.

**கணக்கு மீதிகளைக் கொண்டு பரீட்சை மீதி தயாரித்தல்**

ஒவ்வொரு கணக்கின் பற்றுப் பாகக் கூட்டுத் தொகைக்கும் வரவுப் பாகக் கூட்டுத் தொகைக்குமுள்ள வித்தியாசங்களை (மீதிகளை)ப் பரீட்சை மீதியில் அவ்வக் கணக்குகளுக்கு எதிரே பற்றுப் பாகத்தில் அல்லது வரவுப் பாகத்தில் மட்டும் பதிந்து இருபக்க நிரல்களையும் கூட்ட ஒரே தொகை வரல்வேண்டும்.

**உதாரணம்:**

காசுக்கணக்கின் பற்றுப்பாகக் கூட்டுத்தொகை 6500. காசுக்கணக்கின் வரவுப் பாகக் கூட்டுத்தொகை 4250. பற்றுப்பாகக் கூடுதல் தொகை 2250 ரூபாவையும் பரீட்சை மீதியில் காசுக்கணக்கு என எழுதி பற்றுப்பாகத்தில் பதிதல் தேண்டும்.

வங்கிக்கணக்கின் பற்றுப்பாகக் கூட்டுத்தொகை 6750. வரவுப் பாகக் கூட்டுத்தொகை 7900. எனவே வரவுப்பாக வித்தியாசம் 1150 ரூபாவை பரீட்சை மீதியில் வங்கிக்கணக்கின் எதிரே வரவுப்பாகத்தில் பதிதல் வேண்டும். இவ்விதம் ஏனைய கணக்குகளின் மீதிகளையும் அவற்றுக்குரிய நிரலில் பதிந்து இருபக்கத் தொகைகளையும் கூட்ட ஒரே தொகை வரல்வேண்டும்.

தற்காலத்தில் பெரும்பாலும் மீதிகளைக்கொண்டே பரீட்சை மீதிகளைத் தயாரிக்கிறார்கள். சில வர்த்தக நிறுவனங்கள் ஒரே நேரத்தில் இரு முறையிலும் தயாரிக்கிறார்கள். அவ்விதம் தயாரித்தலை நான்கு நிரல் பரீட்சை மீதி என்று அழைப்பர்.

கணக்கு மீதிகளைக் கொண்டு பரீட்சை மீதி தயாரிப்பதில் எண்கள் சிறு தொகைகளாக இருப்பதால் கூட்டல் இலகுவாக இருக்கும் பின் கணக்குகளைச் சமப்படுத்துவதும் சுலபமாக இருக்கும். கணக்குத் தொகைகளைக் கொண்டு தயாரிப்பதால் வியாபார நிலையத்தின் வியாபார நடவடிக்கைகளின் அளவு ஓரளவு வெளிப்படும்.

**பரீட்சை மீதி தயாரிப்பதன் நோக்கம்**

1. கணக்குகள் முறையாக இரட்டைப் பதிவுத் தத்துவத்தின்படி பதியப்பட்டுள்ளனவா என்பதையும் கணக்குத் தொகைகளின் கூட்டல்சரியானதா என்பதையும் அறிதல்.
2. வியாபார நிலையத்தின் விலையை அறிதல்.
3. வியாபார நிலையத்தின் முடிவுக் கணக்குகளைத் தயாரிப்பதற்கு உதவியாக இருத்தல்.

குறிப்பு: சென்ற இதழில் கணக்கேடுகளில் பதிந்த வியாபர்ர நடவடிக்கைகளின் கணக்குகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இங்கு தரப்படுகின்றது.

**சிவானந்தன் என்ற வியாபாரியின் 31-1-69-ம் தேதியன்றுள்ள பரீட்சை மீதி**

| | | மொத்தத்தொகை | | மீதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | பற்று | வரவு | பற்று | வரவு |
| 1. | நிலம் கட்டிடம் | 15000 | ... | 15000 | ... |
| 2. | தளபாடம் | 2100 | 550 | 1550 | ... |
| 3. | முதலீடு | 5000 | ... | 5000 | ... |
| 4. | சரக்கு இருப்பு | 3750 | ... | 3750 | ... |
| 5. | கொடுத்த கழிவு | 275 | ... | 275 | ... |
| 6. | பெற்ற கழிவு | | 275 | | 275 |
| 7. | நாதன் கணக்கு | 4605 | 2100 | 2505 | ... |
| 8. | தேவன் கணக்கு | 5700 | 5700 | ... | ... |
| 9. | ஆனந்தன் | 1750 | 3450 | ... | 1700 |
| 10. | குமரன் | 2300 | 4300 | ... | 2000 |
| 11. | மூலதனம் | ... | 29250 | ... | 29250 |
| 12. | விற்பனை | ... | 14650 | ... | 14650 |
| 13. | கொள்வனவு | 8500 | ... | 8500 | ... |
| 14. | உட்திரும்பிய சரக்கு | 550 | ... | 550 | ... |
| 15. | வெளித்திரும்பிய சரக்கு | ... | 550 | ... | 550 |
| 16. | வருமதியுண்டியல் | 2500 | ... | 2500 | ... |
| 17. | சென்மதியுண்டியல் | ... | 2000 | ... | 2000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18. | வெற்றுப்பொருள் விற்: ... | | 150 | ... | 150 |
| 19. | பெற்ற தரகு ... | | 300 | ... | 300 |
| 20. | சில்லறை வருமானம் ... | | 400 | ... | 400 |
| 21. | பெற்ற வட்டி ... | | 25 | ... | 25 |
| 22. | ஈட்டுக் கடன் ... | | 5000 | ... | 50000 |
| 23. | கொள்வனவுச் செலவு | 150 | ... | 150 | ... |
| 24. | விற்பனைச் செலவு | 100 | ... | 100 | ... |
| 25. | வாடகை | 150 | ... | 150 | ... |
| 26. | சம்பளம் | 300 | ... | 300 | ... |
| 27. | கொடுத்த வட்டி | 20 | ... | 20 | ... |
| 28. | அ. மு. கடன் | 1400 | ... | 1400 | ... |
| 29. | பெறுமானக் குறைவு | 50 | ... | 50 | ... |
| 30. | தளபாட விற்பனை நட்டக் கணக்கு | 80 | ... | 80 | ... |
| 31. | தபாற் செலவு | 15 | ... | 15 | ... |
| 32. | கூலி | 23 | ... | 23 | ... |
| 33. | பிரயாணச் செலவு | 15 | ... | 15 | ... |
| 34. | சில்லறைச் செலவு | 22 | ... | 22 | ... |
| 35. | காசுக்கணக்கு | 19870 | 4705 | 15165 | ... |
| 36. | வங்கிக் கணக்கு | 2600 | 3520 | ... | 920 |
| 37. | சில்லறைக் காசேடு | 180 | 80 | 100 | ... |
| | | 77005 | 77005 | 57220 | 57220 |

— தொடரும்

## சென்ற இதழின் பிழை திருத்தம்

16ம் பக்கம் ''கொடுத்த வட்டி'' என்ற கணக்கில் வங்கி வட்டி 20 ரூபா வரவுப் பாகத்தில் பதியப்பட்டுள்ளது. அதைப் பற்றுப் பாகத்தில் பதிந்து கொள்க.

✶✶

## மாணவர் மன்ற பேனு நண்பர் சங்க அங்கத்தவர்களுக்கு

வெற்றிமணியில் வெளியிடப்படும் பேனு நண்பர் சங்க மாணவர் மன்ற அங்கத்தவர்களுக்குக் கடிதம் எழுதுகிறவர்கள் கவனிக்க வேண்டியது. தோழர்களுக்குத் தோழர்களும் தோழியர்களுக்குத் தோழியர்களுமே கடிதம் எழுதவேண்டும். இரு பாலாரும் எழுதலாம் எனக்குறிப்பிடும் தோழியர்களுக்கு தோழர்களும் எழுதலாம்.

— ஆசிரியர்




## வானமே!

''திக்குவல்லை கமால்''

வையகத்தின் கூரையென விரிந்தெலாம்
வளைந்தெங்கும் கவிந்தொளிரும் வானமே!
மெய்யளந்து விளங்கிடாத புதிரென
விரிந்திடுமுன் விந்தைகளைப் பாடவோ?

காலைதரும் கவின்காட்சி மிளிர்ந்திட,
களிகுலுங்கப் பார்செழித்து உயர்ந்திட,
நீலமணித் துகில்கொண்டே ஞாயிறை
நீசுமந்து தருமழகைப் பாடவோ?

இரவென்னும் இருட்சேலை போர்த்தியே,
இளங்காதல் சோடிகளை வாழ்த்தியே,
தரளம்போல் விண்பூக்கள் கூட்டியே,
தங்கநிலாப் பவனிவரும் வானமே!

புவிவரண்டு நிலைகுலையும் வேளையில்
புலரவைக்க நீர்சொரியும் வானமே!
குவலயத்தில் உன்பரந்த சேவைகள்
கொண்டுமிக வியக்கின்றேன் நாளுமே!

# சிந்தனை செய்திடு நன்றே!

—:—: நயீமா-ஏ-பஷீர் :—:—

சிந்தனை செய்திடு நன்றே — நீ
சிந்தனை செய்திடு இன்றே!

அன்பு ஏனிங்கு அழியுது — நல்ல
அறமும் ஏனிங்கு சாகுது?
பண்பு ஏனிங்கு குறையுது — தூய
பழக்க மேனிங்கு மறையுது என்று
சிந்தனை செய்திடு நன்றே — நீ
சிந்தனை செய்திடு இன்றே!

கல்வி ஏனிங்கு அருகுது — நல்ல
கருணைவழியு மேனிங்கு மறையுது?
அல்லும் பகலு முழைப்பவர் — பல
அல்லற்படுவது முறைமையோ என்று
சிந்தனை செய்திடு நன்றே — நீ
சிந்தனை செய்திடு இன்றே!

மனிதப் பண்பு ஏன் மறையுது — நல்ல
மாண்புறு செயல்களேன் குறையுது?
புனிதர் பலரேன் புவியிலே — பல
புல்லியரால் நலிவுறுகின்றன ரென்று
சிந்தனை செய்திடு நன்றே — நீ
சிந்தனை செய்திடு இன்றே!

சிந்தனையே உயர்ந்த தவமாமிங்கு — அதைச்
சிந்தைதனிலே இருத்திடு நன்றே!
வந்தனையே சிந்தனையாய்க் கொண்டு — நீ
வள்ளல்கள் வாழ்ந்த வழியே நின்று
சிந்தனை செய்திடு நன்றே — நீ
சிந்தனை செய்திடு இன்றே!

-★-

# துய்யநற் சிலையும் வாழ்க!

— சா ர தா —

1. முத்தமிழ் விரகர் என்பார்;
மும்மொழிப் புலவர் என்பார்;
நற்கலை மாணி யென்பார்;
நறுங்கவி வ்ாண ரென்பார்;
மட்டுமா நகர்ப்பேர் வாழ
வருவிபு லாநந் தப்பேர்
வித்தகர்க் கிவ்வா றெல்லாம்
மெய்ப்புகழ் விளக்கஞ் செய்வார்!

2. கதிரவன் என்னக் கீழ்பாற்
காரையந் தீவு தித்தே,
மதிநலம் மிகம லிந்த
மாணவ ளுகிக் கற்றே
விதிவலி யாலு யர்ந்த
மேதையாய் வித்யா தானம்,
நதியென நல்கி, நாட்டில்
நவயுகம் மலரச் செய்தான்!

3. அரியநல் லாசா னுகி,
அதிபனு மாகிச் செய்த
பெரியதொண் டினைப்பா ராட்டிப்
பேசிடு மீழம்; மற்றும்
விரிவுரை, நூலா ராய்ச்சி
விறலினை உலகும் போற்றும்;
பரிவுடன் அவனின் ஆக்கப்
பணிகளைப் பகர்வார் என்றும்!

4. தெய்விகப் பரம ஹம்சர்
திருச்சபை தன்னிற் சேர்ந்து,
மெய்விபு லாநந் தப்பேர்
விளங்கிட மிகவு ழைத்தான்
ஐயனை நூல்க ளாலே
அறிமுகஞ் செய்யு மன்பர்
துய்யநற் சிலையும் நாட்டத்
துணிந்தமை நன்று; வாழ்க!

# பண்டாரவன்னியன் கொடிக் கீதம்

— முல்லை வே. சுப்பிரமணியன் —
தலைவர், பண்டாரவன்னியன் கழகம், முள்ளியவளை.

வீரந் திகழ் கொடி வெஞ்சமர் வாள் கொடி
வெற்றிமணிக் கொடியே
பாரிலுயர் மன்னன் பண்டார வன்னியன்
பண்பு நிறை கொடியே

மங்கள மஞ்சள் நிறத்தினில் வாளுடன்
மாண்பு பெறப் பறக்கும்
செங்கதிரோ னொளி வீசியெம் நாட்டினைச்
செம்மையுறக் காக்கும்.

வானையளாவிடும் கம்பமதில் உயர்
வன்னிக் கொடி பறக்கும்
சீனத்துப் பட்டொளி வீசியே செந்தமிழ்
வீர இசை பரப்பும்

மேற்குத் திசை நாட்டின் வெள்ளையர் வந்து
மேவு வணிகம் செய்தார்
பார்த்துப் பயந்து நடுங்கியே யோடும்
மணிக் கொடி வாழியவே.

ஆயிரம் ஆயிரம் வன்னியின் வீரர்
அணியினில் வந்து நின்றே
தாயின் மணிக்கொடிதன்னை வணங்கும்
தனயர்கள் வாழியவே!

## பொங்கல் மலர்

வெற்றிமணி பொங்கல் மலர்


**பொங்கல் அன்றே**

**நேயர்கள் கையில் கிடைக்கக்கூடியதாக வெளிவரும்.**

தேவையானோர் இப்பொழுதே 75 சதம் அனுப்பி பெயரைப் பதிவுசெய்து கொள்ளவும்.

சந்தா அனுப்பிய நேயர்களுக்கு மேலதிகச் செலவின்றி மலர் அனுப்பிவைக்கப்படும்.

ஆசிரியர்




# விஞ்ஞானமும் மனித வாழ்க்கையும்

—செல்வி பொ. ரமணி, வள்ளிபுனம், வ/புதுக்குடியிருப்பு. —

ஆதிகாலத்திலே வாழ்ந்த மனிதன் ஆடையின்றியும், பச்சை உணவுகளை உண்டும் மனிதன் என்ற பெயரிலே மிருக வாழ்வு வாழ்ந்து வந்தான். சில காலத்தின் பின் இலை குழைகளையும், மரப் பட்டைகளையும் ஆடையாகவும்; கல்லோடு கல்லைச்சேர்த்து உரோஞ்சித் தீயை உண்டாக்கி உணவுப் பொருட்களை வாட்டியுண்டும்; கற்களை ஆயுதமாகப் பாவித்து மிருகங்களை வேட்டையாடியும் வந்தான். அவை படிப்படியாகக் குறையவே உணர்ச்சிபெற்ற மனிதன் விவசாயம் செய்யத் தொடங்கினான். கற்களையும் - உலோகங்களையும் ஆயுதமாகப் பாவித்துக் கொத்திப் பண்படுத்திப் பயிர் செய்தான். சாதனங்களின்றிப் பெரும் பாடுபட்டுச் சிறிதளவு பயனே பெற்றான். சிறிது முற்போக்குக் கொள்கைகள் தோன்றவே கலப்பைகளிலே எருமைகளையும் மாடுகளையும் பூட்டி உழுது பயிர் செய்தான். குகையில் வசித்தவன் குடிசையில் வசிக்க ஆரம்பித்தான். இப்படிப் படிப்படியாக முன்னேறிவந்த மனித சமுதாயமே இன்று உலகிலே தன் வீரதீரங்களையெல்லாம் நிலைநிறுத்திக் கொண்டு வருகிறது.

ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு நடந்தே சென்றனர். ஸ்ரீவின்சன் என்னும் விஞ்ஞானி நீராவியந்திரத்தைக் கண்டுபிடித்தார். புகைவண்டியிலும், மோட்டார் வண்டியிலும் உல்லாசப் பிரயாணஞ்செய்ய வசதியளித்தார். அதுமட்டுமா! கடலைத் தாண்டக் கப்பல்களும் வந்தன. மனிதன் மான்களைப்போலப் பாய்ந்துவிளையாடக் கற்றான். மீன்களைப்போல நீந்தி விளையாடக் கற்றான். ஆனால் வண்

ணுத்திப் பூச்சிகளைப்போலப் பறந்து திரிய முடியவில்லை. ஒருவராகப் பறக்க முடியவில்லையென்றால் பலரே சேர்ந்து பறக்கும்படி ஒலிவரையிட்-வில்லிவரையிட் என்னும் இரு சகோதரர்கள் ஆகாயவூர்தியையே கண்டுபிடித்துவிட்டார்கள். கடும் நோய்களைத் தீர்க்கவும் மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டன. விசர்நாய் கடிப்பதற்குக்கூட பாஸ்டர் என்னும் பெருந்தகை மருந்தைக் கண்டுபிடித்துவிட்டார். ஊசியூடாக உடலிலே சென்று நோயைத் தணிக்கக்கூடிய பென்சிலின் என்னும் மருந்தைப் பிலமின் என்பவர் கண்டறிந்தார்.

கியூரி அம்மையார் என்னும் பெண்மணி கொடிய புற்றுநோய் நிவாரணியான றேடியத்தைக் கண்டு பிடித்தார். தூரத்தே நடக்கும் நிகழ்ச்சிகளைக் காண்பதற்கோ கேட்பதற்கோ மூட்டை முடிச்சுகளுடன் சென்று தங்கத் தேவையில்லை. வீட்டிலிருந்துகொண்டே நிகழ்ச்சிகளைக் கேட்பதற்குக்கூட வானொலியைக் கண்டுபிடித்தார் மார்க்கோனி என்பவர். இருந்த இடத்திலிருந்துகொண்டே நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழத் தொலைகாட்டி கூடவுண்டு. ஒரு செய்தியை உறவினர்க்கோ அன்றேல் நண்பர்கட்கோ அறிவிக்க எத்தனை நாள்? எவ்வளவு நேரம்? இதைக்கூடப் போக்க அல்வா எடிசன் என்பவர் தொலைபேசியையும் கண்டுபிடித்துவிட்டார்.

தனித்தனியே ஆராய்ச்சி செய்து வெற்றி பெற்ற ஆராய்ச்சியாளர்களைக் கண்ட விஞ்ஞானக் கொள்கைகளில் முன்னேற்றமுடைய இரசியா, அமெரிக்கா போன்ற நாடுகள் தாங்கள் பெரும்பாலோர் ஒன்று சேர்ந்து ஆராய்ச்சி நடத்தினர்கள். சக்திமிக்க பல பொருட்களைக் கொண்டு அடர்த்தி கூடியதாகவும், விஸ்தீரணம் குறைந்ததாகவும் அணுக்குண்டுகளைக் கண்டுபிடித்தார்கள். இதனல் நன்மையும், தீமையும் உலகிற்கு விஞ்சிவிட்டது. ஆகாய மார்க்கத்திலே நச்சுப்புகை பரந்து நோய்களைக்கூட உண்டாக்கிற்று. அதற்கும் தடை விதித்தவன் மனிதனே! விண்வெளிக் கப்பலைக் கண்டறிந்தவனும் அவனே! ‘அப்பலோ 11’ விண்வெளிக் கப்பலிலே சென்று தாய்க்கலத்திலிருந்தே சந்திர மண்டலத்தை அவதானித்த மைக்கேல்

கொலின்சும் மனித வர்க்கத்தினனே! சந்திர மண்டலத்தி லேயே உலகறிய முதன்முதலிற் காலடி எடுத்துவைத்த மாபெரும் வீரர்கள் ஆம்ஸ்ரோங்கும், ஆல்டிறினும் மனிதர்களே! இப்படி வளர்மதியென வாழை யிளங் குருத்தென வளர்ந்துவரும் விஞ்ஞான யுகத்தில் மனித சமுதாயத்தினல் எதைத்தான் சாதிக்க முடியாது?

— ✱ ✱ —

# முக்கிய உயிர்ச் சத்துக்கள்

—[ எம். ஐ. எஸ். தாவூத், 38, மெயின் வீதி, மட்டக்களப்பு. ]—

நம் வாழ்வுக்குத் தேவையான மிக முக்கிய உயிர்ச் சத்து, பலவுண்டு.

உயிர்ச்சத்து 'ஏ' (A)

பாலூட்டிகளின் ஈரல்களிலும், மீன்களின் ஈரல்களிலும் பாலிலும், முட்டையிலும் உண்டு. இதை வெப்பத்தினல் அழிக்கமுடியாது. இவ் வுயிர்ச்சத்து 'ஏ'க்கு முன்னேடியாக உள்ள 'கரடோன்' என்னும் பொருள் பச்சிலைகளிலும், பழங்களிலும் உண்டு. இவ் வுயிர்ச்சத்துக் குறைவாக இருந்தால் கண்ணேய், மாலைக்கண், பற்களும்-எலும்புகளும் வளராதிருத்தல், சருமநோய் முதலிய வியாதிகள் தோன்றும். இவ் வுயிர்ச்சத்து அதிகமாளுல் அதை எளிதில் வெளியேற்ற முடியாது. அது நச்சுத்தன்மை உள்ளதாகிவிடும்.

உயிர்ச்சத்து 'டீ' (D)

இது கொழுப்பில் கரையக்கூடியது. இது ஈரலிலும், எண்ணெயிலும், முட்டைக் கருவிலும், காளான்களிலும் உண்டு. இவ் வுயிர்ச்சத்துக் குறைந்தால் எலும்பு வளர்ச்சி தடைபடும். பற்கள் முளையாமலிருக்க ஏதுவாகும். எலும்புகளையும்-பற்களையும் உண்டுபண்ண 'கல்சியமும்' 'பொஸ்பரசும்' தேவைப்படுவதனல் உயிர்ச்சத்து 'டீ'யுடன் அவை தொடர்பு கொண்டுள்ளன. உயிர்ச்சத்து 'டீ' அதிகரிப்பது கூடாது.

**உயிர்ச்சத்து 'ஈ' (E)**

இவ் வுயிர்ச்சத்து கொழுப்பில் கரையக்கூடியது. இது வித்துக்களிலும்-பச்சிலைகளிலும் காணப்படும். எலி, நாய், முயல், குரங்கு ஆகிய விலங்குகளில் இவ் வுயிர்ச்சத்துக் குறைந்தால் 'மலடை' ஏற்படுத்தும்.

**உயிர்ச்சத்து 'கே' (K)**

இவ் வுயிர்ச்சத்தும் கொழுப்பிற் கரையக்கூடியது. இது பச்சிலைகளிலே அதிகமாகக் காணப்படும். இவ் வுயிர்ச்சத்து குருதி (இரத்தம்) உறைதலுக்கு உதவுகிறது. அதாவது திடீரென ஏற்பட்ட ஒரு வெட்டுக் காயத்திலிருந்து குருதி தொடர்ந்து வெளிவராமற் தடுக்க உதவுகிறது. இதனுல் இரத்த நஷ்டம் ஏற்படாது.

**உயிர்ச்சத்து 'சி' (C)**

இவ் வுயிர்ச்சத்து நீரிற் கரையக்கூடியது. இது அதிகமாகப் பச்சிலைகளிலும்-பழங்களிலும் உண்டு. இது அதிகமாக 'தோடை'க் குடும்பத்தைச் சேர்ந்த பழங்களில் உண்டு. இவ் வுயிர்ச்சத்து இல்லாவிட்டால் 'கேவி' அவயவ நோய்களைக் கொடுக்கும்.

சோடியம், பொட்டாசியம், கல்சியம் ஆகிய மூன்றும் குருதித் திரவ விழயத்திற்கு அவசியமாகும்.

மகனீசியம், குளோரின் என்பன ஜீரணத் தொகுதிக்கு மறைமுகமாக வேண்டப்படுகின்றன.

கோடைச் சுரப்பி தொழிற்பட அயடீன் அவசியமாகும். பற்கள் பழுதடையாமலிருக்க புளோரின் அவசியமாகும்.

—✱—

## சமய வளர்ச்சிக்கு
# கூட்டு வழிபாட்டின் அவசியம்

+ சூ. சூரியகுமாரன் - கோப்பாய் +

இன்று எமது நாட்டிலே இறைவழிபாட்டுக்கே போட்டி ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பது இன்றைய இருபதாம் நூற்ருண்டின் நவநாகரீக வளர்ச்சியில்

தெளிவாகின்றது. இது மாத்திரமல்ல இன்று எமது சமய வளர்ச்சியிலிருந்தும் அறியக்கூடியதாகும்.

நமது நாட்டில் ஆதிகாலத்திலே சமய வளர்ச்சி மிக வும் வளர்ச்சியுற்று இருந்ததை இன்றும் நம் முன்னோர் களின் சரித்திரங்கள் சான்று பகருகின்றன. இவ் வரலாற் றுக் காலங்களிலே மிகவும் பழமையானதும் புதுமை நிறைந் ததுமான காலம் நம் ''நாயன் மார்களின்'' காலமாகும். திருநாவுக்கரசு நாயனுர், சுந்தரமூர்த்தி நாயனுர், திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனுர், மாணிக்கவாசசுவாமிகள் ஆகியோரால் செய்யப்பட்ட அற்புதங்கள் நம்மைச் சிந்தனை யில் ஆழ்த்தி, திகைப்புற வைக்கும் இவ் வேளையிலே நமக்குப் பின் வரும் சமுதாயம் நம்மைப்பற்றிச் சிந்தியாவிடினும் இந் 'நாயன் மார்களை' யாவது சிந்திக்கும் வண்ணம் நாம் செயலாற்ற முடியாதா?

மனிதன் மனதில் தோன்றும் சிந்தனைக்கேற்ற பயனை அடைந்தே தீருகின்ருன். நம்மைப் படைக்கும் பிரமாவே இறைவனின் துணைகொண்டு இயங்கும்போது நாம் அவன் முன் எம்மாத்திரம்? இன்று நம் மத்தியில் கடவுள் இருக் கின்ருரா? இல்லையா? என்னும் பிரச்சினை தலைதூக்கி நிற்கின்றது. இவ்விடத்தில் நரசிங்க மன்னனின் கதை விடை பகருகின்றது.

அண்மையில் நம்மை விட்டுப் பிரிந்த தமிழக முதல் அமைச்சர் 'அண்ணுத்துரை' கடவுள் இல்லை என்று கூறிய தாக நம்மில் ஒரு சாரார் கூறுகின்றனர். ஆனுல் அண்ணு அவர்கள் கடவுள் இல்லை என்று கூறவில்லை; கூறியிருக்கவும் மாட்டார். அண்ணு அவர்கள் கூறியது யாதெனில் ''நம் நாட்டின்கண்ணே எங்கு நோக்கினும் எண்ணிக்கையில் அதிகமான சைவக் கோயில்கள் உண்டு. அதுமாத்திரமல்ல! அச் சைவக் கோயில்களை வழிபடுவதற்கே இன்றைய சூழ் நிலையிற் பக்தர்கள் இல்லாதவேளையில் நாம் மீண்டும் கோயில்களைக் கட்டுவது பிரயோசன மற்றதாகும். இதே நேரத்திலே நமது நாட்டிலே இன்று கல்வி, விவசாயம், சௌக்கியப் பகுதி முதலியவற்றை நமது மக்கள் பெற்றுக் கொள்ளுவதற்கு இடவசதி-பணவசதி இல்லாத இவ்வேளை யில் நாம் இடவசதி-பணவசதி அவ்விரண்டையும் இவ்வழி

யிலே செலவழித்தால் அது நமக்கும் இனிவரும் சமுதாயத்திற்கும் பெரும்பயன் அளிக்கும் என்பதில் ஐயமில்லை'' என்றுரே தவிர 'கடவுள் இல்லை' என்று கூறவில்லை.

'இப் பிறவி தப்பினுல் எப் பிறவி வாய்க்குமோ' எனும் வாக்கினிற் கிணங்க நாம் அந்த இறைவனை வழிபடும் வகையிலாவது பிரச்சினைகளைக் கிளப்பாது, கேள்விக்கணை தொடுக்காது, 'ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்' என நினைத்து வழிபடுவோமாயின் 'நாம் இம் மானிடப் பிறவியைப் பெற்றது இதற்கே' என எண்ணித் தொழுவோமாயின் அதன் பயன் நமக்கேயன்றிப் பிறர்க்கில்லை. இது இன்று நேற்றுத் தோன்றியதல்ல. நமக்கு முன் வாழ்ந்த பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றின்மூலம் அறிகிறோம்.

நாம் இத்துடன் மட்டும் நிற்காது 'கூட்டு வழிபாடு' என்னும் புதிய அம்சத்திற்குள் நுழைகின்றபோது அது நமது சமயத்தின் வளர்ச்சிக்குத் துணை செய்வது மாத்திரமல்லாமல் நமது சமயத்திற்கு உறுதியாகவும் அமைகிறது. கூட்டு வழிபாட்டால் பல இனத்தை ஒன்று சேர்த்தல் இலகுவாகும்.

இங்கே முதலில் தனி மனிதன் ஒருவன் தனது மனதை ஒரு நிலைப்படுத்தி வழிபாடு செய்து பின் பல மனிதர்களின் மனத்தை ஒருவழிப்படுத்தி வழிபாடு செய்வதே ''கூட்டு வழிபாடாகும்.'' இதனுல் மக்களிடையே அமைதி நிலவும். தேருக்கு அச்சாணி எவ்வளவு சிறந்ததோ அது போல மானிட வாழ்வின் எப் பகுதிக்கும் இறைவழிபாடு அவசியம் தேவை என்னும் கருத்தும் வெளிப்படையாகிறது.

வளர்க நம் சமயம்! வளர்க நம் ஒற்றுமை!!


## விற்பனையாளர்கள் தேவை!

வெற்றிமணி விற்பனை செய்ய

**முற்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை**

பிரதிக்கு 5 சதம் கமிஷன் கொடுக்கப்படும்.

**விளம்பரம் சேகரித்துக் கொடுப்பவர்களுக்கு**

20 சத வீதக் கமிஷன் கொடுக்கப்படும்.

ஆசிரியர்

# சேர்ந்து பாடுவோம்!

— | சாரதா-சங்கர் | —

**பேனு:** அடே சரவணு! எங்கே அப்படிக் குதித்துக் கொண்டே ஓடுகின்ருய். பாடசாலையால் வந்ததும் வராததுமாக என்னை இப்படி வீசி எறிந்துவிட்டாயே ம்...! உன் தோழன் சேகருடன் பந்தடிக்கவா ஓடுகின்ருய்?

**சரவணு:** ஆமாம். அதையேன் கேட்கின்ருய்? நான் மட்டும் தான் சேகருடன் பந்தடிக்கிறேனு? கோவில் வீதியில் வந்து பாரேன் எத்தனை பேர் எங்களுடன் விளையாடுகிருர்கள் என்று. ஏன் பாப்பா பாட்டிற் கூட பாரதியார் ''மாலை முழுவதும் விளையாட்டு என்று சொல்லவில்லையா? இன்னும் சுகாதாரம் படிக்கும்போது ஆசிரியர் உடல் உறுதி பெற விளையாட்டும் அவசியம் என்று சொன்னுர் அல்லவா?

**பேனு:** அது சரிதான் நான்கூட அவற்றையெல்லாம் எத்தனையோ முறை எழுதி இருக்கின்றேன். ஆனுல், நீ என்னைத் தொப்பென்று எறிந்துவிட்டுப் போவது சரியா? (பேனை தன் மனதுக்குள் சொல்லுகிறது) 'ம்...ம்! இந்த மனிதர்களே இப்படித்தான்; நன்றி கெட்டவர்கள்; இவனின் தந்தை, மகனுக்குப் பிறந்தநாள் என்று அன்போடு வாங்கிக்கொடுக்க இரண்டு நாள் பகட்டாக வைத்திருந்துவிட்டு இப்படித் தூக்கி எறிகிருனே இந்தப் பையன் ஸ் ...ஸ் இப்பகூட எப்படி வலிக்கிறது!

**சரவணு:** யாரடி இவள்? வாய்க்குள் முணுமுணுப்பதும் ஏதோ உரிமையுடன் உபதேசம் செய்வதும்.

**பேனு:** ஓகோ! ஓகோ! அதற்கிடையில் மறந்துவிட்டாயா? பாடசாலையில் அழகாக எழுதிக்காட்டி ஆசிரியரிடம் பாராட்டுப் பெற்றது. இன்னும், வெற்றிமணி என்ற பத்திரிகைக்கு ஒரு குட்டிக் கவிதை எழுதி அது பிரசுரமானதும் 'தாம்தீம்' என்று பெருமையுடன் எல்லோரிடமுங் காட்டித் திரிந்தாயே அப்போதெல்லாம் இப் பேனு 'ராணி' கிடைத்த

அதிஷ்டம் என்று உன் மனத்துள் எண்ணவில்லையா? இப்போதென்றால் ஏனோ தானோ என்று எறிகின்றாயே!

**சரவணா:** ஆகா! பேனாராணி உன் சாகசம் இப்போதுதான் புரிந்துகொண்டேன். மணி மாமாவின் கையிலே உன் எழுத்துத் தவழ்ந்து விளையாடியது அல்லவா? அந்தத் துடிப்பிற்தான் என்னை எழுதும்படி தூண்டுகிறாய். இனிமேல் அதெல்லாம் முடியாது! நான் எழுத நீ அங்கு மாமாவின் கையில் இருப்பதா?

**பேனா:** அடே சரவணா! நான் மாமாவின் கையில் இருப்பதை நினைத்து இப்படிப் பெருமைப்படுகின்றாயே. நான் இல்லாவிட்டால் நீ இப்படி அழகாக எழுத முடியுமா?

**மை:** என்ன சரவணா அண்ணா! பேனா அக்கா! இப்படி நான், நான் என்று போட்டி போடுகின்றீர்கள்! எல்லாவற்றையும் நானும் கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றேன். நான் இல்லாவிட்டால் நீங்கள் ஓர் எழுத்தாகுதல் எழுதியிருப்பீர்களா?

**சரவணா:** ...ம்! யாரடா இவன்? முந்திரிகைக் கொட்டை மாதிரி எங்கள் பேச்சிற் தலையிடுபவன். அடடா! ஆளையே காணோமே; ஒளித்திருந்தா பேசுகிறாய்? ஆகா! மைத் தம்பியாரே இப்படி வாரும். நல்ல சமயத்தில் வந்தாய். 'நான்' - 'நான்' என்ற செருக்கு ஒருவருக்கும் கூடாததுதான். அதோ பார் பேப்பர் ராஜா எப்படிப் பேசாமல் எல்லோருக்கும் நல்லவனாக இருக்கிறான் என்று. எல்லோருக்கும் நல்லவனாக இருப்பதே நன்று!

**பேப்:** அண்ணா! ஏன் அண்ணா இப்போதே தீபாவளிக்கு வெடிகளும் மத்தாப்புகளும் வாங்கிக் குவிக்கிறீர்கள்? ஏன் இப்படிக் காசைக் கரியாக்குகிறீர்கள்? உங்கள் வெடிச் சத்தத்தில் நரகாசுரன் பயந்து ஓடி விடுவானோ?

**சரவணா:** ஆமாம்! நல்ல அசுரனை ஞாபகப்படுத்தினாய். இப்போது ஓயாமற் பெய்த மழையினால் புல்

பூண்டுகளிலிருந்து 'நெங்ய்-நெங்ய்' என்று நுளம்புப் படைகள் வருவதை அறிவாயே. நாங்கள் வெடிக்கும் வெடிகளிலிருந்து புறப்படும் கந்தகப் புகையினுல் நுளம்பு அசுரர்கள் பூண்டோடு ஒழிந்துவிடுவார்கள் என்பதை அறிந்துகொள்!

**பேப்பர்:** நல்லது அண்ணு. கைகள் கவனம்! வெடிகளைக் கவனமாக வெடிக்கவும்.

**சரவணு:** வாருங்கள் எல்லோரும் சேர்ந்துபாடுவோம்!

நரகா சுரனை நடுங்க வைத்தே பரம மாதா பவனி வரும் நன்னுள்
பட் பட் பட்டாசை சட் சட் என்று கொழுத்திடுவோம்
ஸ் ஸ் மத்தாப்பூ எனக்கு வேண்டும் கொத்தாக
பட்டுச் சட்டை போட்டு பரமன் பாதம் பணிந்து
சுட்டசுட்ட பணியாரம் சொகுசாய்தின்று மகிழ்ந்திடுவோம்

**


**இலங்கை முழுவதும் ஏஜண்டுகள் தேவை!**

தமிழ்க் குழந்தைகளின் உள்ளத்தைத்
துள்ளச் செய்யும்

**— " அணில் " —**

[சிறுவர் - சிறுமியர் மாத இதழ்]

★ **சின்னச் சின்னக் கதைகள்!**
★ **சிங்காரப் பாட்டுகள்!**
★ **வேடிக்கை விநோதங்கள்!**
★ **பலவகையான பரிசுப்போட்டிகள்!**

ஒவ்வொரு மாதமும் 25,000 குழந்தைகள்
போட்டி போட்டுக்கொண்டு படிக்கிருர்கள்.

தொடர்பு கொள்க: **" அணில் "**

ஸ்ரீ ராம பவனம் பில்டிங்,
50, காந்தி வீதி, புதுச்சேரி - 1.

# பண்டாரவன்னியன் நினைவு விழா

இ. வரதராஜா, செயலாளர், பண்டாரவன்னியன் கழகம், முள்ளியவளை

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும், 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலமும் இலங்கை அந்நிய ஆதிக்கத்துட் தத்தளித்துக்கொண்டிருந்த காலம். கரையோர மாகாணங்கள் யாவும் ஏகாதிபத்தியத்தின் பிடியிற் சிக்கியிருந்தாலும் ஆங்காங்கே சுதந்திரக் கனல் மூண்டு, கொழுந்துவிட்டெரிந்து, குமுறிக் கொந்தளித்துக்கொண்டிருந்தது.

வீரம் செறிந்து; வளம் நிறைந்து விளங்கிய வன்னி நாட்டை அந்நியன் அடிமைகொள்ள வந்த காலத்திற் சீறியெழுந்து, சிம்ம கர்ச்சனை புரிந்து ''அந்நியனே வெளியேறு'' என்று வீரமுழக்கமிட்டுப் போர்க் கொடி உயர்த்தியவன் வன்னி மண்ணின் கடைசி மன்னன், தன்னிகரில்லாத் தலைவன், மாவீரன் பண்டாரவன்னியன்!

கப்டன் வொன்ட்றிபேக்கினால் 1803ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ஆம் திகதி பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்ட இடமாகிய கற்சிலைமடுவிலே கடந்த வருடம் பெருவிழா எடுத்தோம். பூரண கும்பங்கள் பொலிய, வாள் தாங்கிய பொன்நிறக் கொடி விண்ணிலே அசைய, ஆயிரக் கணக்கான பள்ளி மாணவரும் - பல்லாயிரக் கணக்கான பொதுமக்களும் மறைந்த வீர புருஷனுக்கு அஞ்சலி செலுத்தினர். அந் நாளிலேயே மாவீரனுக்கு மணிமண்டபம் அமைக்க அத்திவாரக் கல்லும் நாட்டப்பட்டது.

இவ் வருடம் ஐப்பசி 31ஆம் திகதி விழாவை முல்லைத் தீவிற் கொண்டாடினோம். அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து சிம்ம கர்ச்சனை புரிந்து போர்க் கொடி உயர்த்திய பண்டாரவன்னியன், முதலிலே தகர்த்த கோட்டை முல்லைத் தீவிலே அமைக்கப்பட்டிருந்த ஆங்கிலேயரது கோட்டையாகும். இங்கு நடந்த போரில் எதிர்நின்று சமர்செய்ய முடியாது கப்டன் வொன்ட்றிபேக்கின் தலைமையில் வந்த வெள்ளைப் படை புறமுதுகிட்டது; கோட்டையில் வாட் கொடி சுடர்விட்டுப் பறந்தது; அந்நியரது ஆயுதங்களான பீரங்கிகளிற் சில பண்டாரவன்னியன் வசமாயின. எனவே, இம்முறை அவ் வீர பூமியில் விழாவை எடுத்தது மிகப் பொருத்தமானதே!

காலை ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் கோவிலில் விசேட பூசையும், கற்சிலைமடுவில் மறைந்த மாவீரனின் நடுகல்லுக்கு மலரஞ்சலியும் இடம்பெற்றன. எமது கழகப் போஷகரும், வவுனியா நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. தா. சிவசிதம்பரம் அவர்களுட்படப் பல அரசாங்க அதிகாரிகளும், பொதுமக்களும், பள்ளி மாணவரும் மலர்தூவி அஞ்சலி செய்தனர்.

மாலை, முல்லைத்தீவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற் பல அறிஞர்களின் சொற் பெருக்கு, கவிப் பெருக்கு, கலைச் சிறப்பு ஆதியன இடம்பெற்றன. பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும், முல்லைச் சோதரிகளின் பரத நாட்டிய நிகழ்ச்சியும், கழகத்தினரின் பண்டாரவன்னியன் நாடகமும் விசேட நிகழ்ச்சிகளாக இருந்து மக்களை மகிழ்வித்தன!

ஒவ்வோராண்டும் சுதந்திர வீரனின் நினைவுதினத்தைச் சிறப்பாகக் கொண்டாடவேண்டும் என்பதே எமது நோக்கம். அத்துடன் மாவீரனின் சிலை நிறுவவும், மணிமண்டபம் அமைக்கவும் பொதுமக்கள் அனைவரும் எம்முடன் ஒத்துழைக்கவேண்டும் எனவும் பணிவுடன் கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

## கட்டுரைப்போட்டி விதிகள்

1. மாணவர் மன்ற அங்கத்தவர்கள் மாத்திரம் இப் போட்டியிற் பங்குபற்றலாம்.
2. ஒருவர் ஒரு கட்டுரை மாத்திரம் அனுப்பலாம்.
3. கட்டுரையுடன் கட்டுரைப் போட்டிக் கூப்பனையும் இணைத்து அனுப்ப வேண்டும்.
4. குறிப்பிட்ட சொற்களுக்குமேல் கட்டுரை இருக்கக் கூடாது.
5. கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதவேண்டும்.
6. போட்டி முடிவு திகதிக்குப் பின் கிடைக்கும் கட்டுரைகள் போட்டிக்குச் சேர்க்கப்படமாட்டா.
7. முன் வெளிவந்த, வேறு ஒருவரால் எழுதப்பட்ட கட்டுரைகளின்றிச் சுயமாக எழுதப்படும் கட்டுரைகளை அனுப்புக.




எம். பி. துரைச்சாமி, தலைவர்
தலவாக்கொல்லை மாவட்ட
எழுத்தாளர் மன்றம்,
தலவாக்கொல்லை.

ஆசிரியர்: 'வெற்றிமணி'

பேரன்புடன் வணக்கம்! தங்களின் 15-8-69 'வெற்றிமணி' மாத இதழ் என் கரம் கிட்டியது. இதழ் என் கரம் கிட்டியவுடன் யான் யாருக்கு நன்றி செலுத்துவது என்று தெரியாமல் திண்டாடினேன். இறுதியில் ஒரு முடிவுக்கு வந்து இதழின் ஆசிரியருக்கே நன்றி உரித்தாகட்டும் என்று இக் கடிதத்தை எழுதுகின்றேன்.

சிறுவர் மாத இதழான 'வெற்றிமணி' மாணவர்களிடம் மட்டுமல்லாமல், எங்கெங்கு தமிழ் உணர்ச்சியும், தமிழ் ஆர்வமுங் கொண்ட மக்கள் இருக்கின்றார்களோ, அங்கெல்லாம் வெற்றி முரசு கொட்டி, தமிழ் மக்களுக்கும், தமிழ் அன்னைக்கும் நற்தொண்டு புரிந்து நாட்டின் 'நல்லிதழ்' என்று பெயரெடுக்க என் இதயம் கனிந்த நல்வாழ்த்துகள் உரித்தாகுக!

ச. சாரதா, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

வெற்றிமணி ஆசிரியருக்கு,

தங்கள் பத்திரிகையில் வெளியாகும் சிறந்த விஷயங்களை எல்லாம் வாசித்து எங்கள் வீட்டுச் சிறுவர்கள் நல்ல பழக்க வழக்கங்களைக் கைக் கொள்ளுகின்றார்கள். நாங்கள் அவர்களுக்குத் தினம் தினம் சொல்லி நல்லவர்களாகத் திருத்துவதிலும் பார்க்கத் தங்கள் பத்திரிகை மாதமொருமுறை வீட்டுக்கே வந்து எங்கள் குழந்தைகளை நல்லவர்களாக்குவதைப் பார்க்க பெற்ற தாய் தந்தையருக்கும் உள்ள சகோதரங்களுக்கும் ஏற்படும் மகிழ்ச்சி மட்டற்றதே.

திக்குவல்லை கமால்,
149, யோனகபுர, திக்குவல்லை.

'வெற்றிமணி' ஆசிரிய!

தங்களால் அனுப்பிவைக்கப்பட்ட 'வெற்றிமணி' கிடைக்கப் பெற்றேன். நன்றி!

கனக. செந்திநாதனின் கட்டுரை இலக்கிய நயம் செறிந்ததாக உள்ளது. கவிஞர் சுந்தரம் பிள்ளை, நவாலியூர்க் கவிராயர் இவர்களின் கவிதைகள் பாராட்டத்தக்கன. மொத்தத்தில் சிறுவர்க்கேற்ற விடயங்கள் சிந்தைக்கினிய விதத்தில் நிறைந்துள்ளன.

'இலங்கை' என்ற அடிப்படையில், பல பாகங்களிலும், மாணவர் மத்தியில் வெற்றிமணி பிரபல்யமடைந்துள்ளதா? என்ற ஏக்கம் என்னை வாட்டுகிறது.

சிறுவர் மத்தியில் தூய இலக்கியச் சிந்தையைப் பரப்பவேண்டுமென்ற ஒரே நோக்கிற் செயற்படும் உங்களுக்கு என்னாலியன்ற எதையும் செய்ய நான் தவறமாட்டேன்.

தென்னிலங்கையில் சிங்களச் சூழலின் மத்தியில் தமிழ் இலக்கிய விழிப் புணர்ச்சியை ஏற்படுத்த முயன்றுவரும் சிலரில் நானும் ஒருவன்!

# ** மணிமொழிகள் **

செல்வி தெய்வநாயகி. பொன்னுத்துரை

1. ''யாதும் நன்றே தீதே கிடையாது. எண்ணமே அதை அவ்விதம் தோற்றமளிக்கச் செய்கிறது''

2. ''வசனத்திலே அல்லது செய்யுளிலே காணும் அழகு மிக்க எதுகை. மேணை எத்தகைய மாப்பிள்ளையும் இளவரசர்களின் கற்சமாதிகளையும் விட உறுதியாக நிலைத்து நிற்பவையாகும்''

3. ''சுருக்கம்தான் அறிவின் ஆன்மா''

4. ''மனிதன் மனவருத்தப்படும் போது பைத்தியகாரனாகிறான். வேதனைப்படும்போது முட்டாளாகிறான்''

5. ஒரு பூசலில் எவன் பக்கம் நியாயம் இருக்கிறதோ அவன் மும்மடங்கு ஆயுதபாணியாகிறான். எவனுடைய மனச்சாட்சி அநீதியால் கறைபட்டிருக்கிறதோ; அவன் எஃகு கோட்டையில் பூட்டிக் கொண்டிருந்தாலும் நிர்வாணமானவனே''

6. ''காட்டுவதைவிட அதிகமாக வைத்திரு; அறிந்ததைவிடக் குறைவாகப் பேசு''

7. ''எவனை விசாரணை செய்கிறார்களோ அவனைவிட பெரிய குற்றவாளியான இரண்டொரு திருடர்கள் அவை மத்தியில் இருப்பார்கள்''

8. ''அழையா விருந்தாளியிடம் அன்பு ஏற்படுவது எப்போது? அவன் திரும்பிப் போன பின்''

9. ''அவன் அளவுக்கு மீறி சிந்தனை செய்கிறான். ஆகவே அவன் ஆபத்தான பேர்வழி''

10. உலகமே ஒரு சோக மேடைதான் இதில் தனியாக உனக்கு என்ன சோகம்''

—-: ஷேக்ஸ்பியர்

# கட்டுரைப் போட்டி

## மொத்தப் பரிசு ரூபா 30-00

*மாணவர் மன்ற அங்கத்தவர்களுக்கு மாத்திரம்*

**கவனிக்க:-** பாடசாலையிற் கற்கும் மாணவர்கள் ஆண்-பெண் இருபாலாரும் வயதுக் கட்டுப்பாடின்றியும், பாடசாலையிற் படிக்காத - 22 வயதுக்குட்பட்ட - ஆண்-பெண் இருபாலாரும் மாணவர் மன்றத்தில் அங்கத்தவராகச் சேரலாம். இதுவரை அங்கத்தவர்களாகச் சேர்ந்தவர்களும், **15-12-69**க்கு முன் அங்கத்தவர்களாகச் சேர்கின்றவர்களும் கட்டுரைப் போட்டியிலும் மற்றும் போட்டிகளிலும் பங்குபற்றிப் பரிசு பெறலாம்.

1. பாடசாலை மாணவர் 16 வயதுக்குட்பட்டவர்
**'தைப் பொங்கல்'** (250 சொற்களுள்)

2. பாடசாலை மாணவர் 16 வயதுக்கு மேற்பட்டவர்
**'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'** (350 சொற்களுள்)

3. பாடசாலையிற் படிக்காதவர் 22 வயதுக்குட்பட்டவர்
**'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'** (350 சொற்களுள்)

என்ற தலைப்பில் குறிப்பிட்ட சொற்களுக்கு அதிகப்படாது கட்டுரை எழுதி 15-12-69க்கு முன் அனுப்பவேண்டும்.

மூன்று பிரிவிலும் சிறந்த கட்டுரையாகத் தெரிவுசெய்யப்படும் ஒவ்வொரு கட்டுரைக்கும் தனித்தனி 10-00 ரூபா பரிசாக வழங்கப்படும்.

ஒருமுறை மாணவர் மன்றத்தில் அங்கத்தவராகச் சேர்ந்தவர் வெற்றிமணி நடாத்தும் எந்தப் போட்டியிலும் பங்குபற்ற முடியும்.

> வெற்றிமணியில் உள்ள கட்டுரைப் போட்டிக் கூப்பனையும் உங்கள் கட்டுரையுடன் இணைத்து அனுப்புக.

**"வெற்றிமணி"** — முள்ளியவளை. — இலங்கை.

---

**கட்டுரைப் போட்டி** முடிவு திகதி 15-12-69

பெயர் ..............................................................

முகவரி ..............................................................

பிறந்த திகதி ..............................................................

மாணவர் மன்ற அங்கத்துவ இல. ..............................................................

இக் கட்டுரை எனது சொந்த முயற்சியால் எழுதப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

..............................................................

கையொப்பம்

# மாணவர் மன்றம்

V

49. சி. சிவலிங்கம், தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி.
50. குமாரசாமி நாகபூரணி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி.
51. பூ. வடிவேல், வந்தாறுமூலை மத்திய கல்லூரி, செங்கலடி.
52. சி. சந்திரமோகன், அ. த. க. பாடசாலை கிளிவெட்டி.
53. ம. சோதிமலர், விவசாயப் பாடசாலை, திருநெல்வேலி.
54. நா. யோகநாதன், விக்னேஸ்வர வித்தியாலயம், மீசாலை.
55. மகாலிங்கம் இளங்கோவன், ம. ம. வித்தியாலயம், நெல்லியடி.
56. ரமணி பொன்னுத்துரை, 32, வள்ளிபுனம், வ/புதுக்குடியிருப்பு.
57. எம். எம். முனூஸ், உஸ்மானியா கல்லூரி, யாழ்ப்பாணம்.
58. மீனும்பாள் முத்தையா, கைலண்ட்ஸ் கல்லூரி, அட்டன்.
59. து. குகதாசன், நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை.
60. சுலோசனு இரத்தினசபாபதிஐயர், இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.
61. கே. எம். பாறூக், மெயின் வீதி, பதியதளாவ.
62. க. மணிவாசகன், ம. ம. வித்தியாலயம், நெல்லியடி.
63. சோமசுந்தரம் ஆனந்தமுருகன், ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்.
64. உஷா சண்முகதாசன், கட்டுடை, மானிப்பாய்.
65. சி. சிவேந்திரசர்மா, நாவலர் பாடசாலை, கோப்பாய்-வடக்கு, கோப்பாய்.
66. ஸ்ரீகுமாரி கதிரித்தம்பி, இருபாலை, கோப்பாய்.
67. பெ. அடைக்கலதாஸ், மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு.

# பேனு நண்பர் சங்கம்

21. செல்வி இராசலட்சுமி தம்பிஐயா,
இராமநாதன் கல்லூரி, சுன்னுகம்.

வயது 18 க. பொ. த. உயர்தர வகுப்பு (கலைப் பிரிவு) மாணவியான இவருக்குத் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாஷைகள் தெரியும். 17 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்ட பெண்பாலார் மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ள வேண்டும். அவர் கல்லூரி மாணவியாக அல்லது உத்தியோகம் வகிப்பவராக இருத்தல் நன்று. இந்தியப் பெண்மணியாக இருப்பின் விரும்பத்தக்கது. தொடர்புகள் தமிழில் இருப்பதை விரும்பும் இவரின் பொழுதுபோக்குகள் பத்திரிகை படித்தல், கதைப் புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல் என்பனவாகும்.

# பேனா நண்பர் சங்கம்

உலகத்தின் பலபாகங்களிலு முள்ளவர்களைக் கடிதமூலம் அறிந்துகொள்ளவும், ஒருவர் கஷ்டத்தை மற்றவரிடம் கூறி ஆறுதல் கொள்ளவும், நல்லவர் உறவைப் பெறவும், தங்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் இச்சங்கம் உதவியாக இருக்கும்.

1. சங்கத்தில் சேர 50சத முத்திரை / போஸ்ரல் ஆடர் அனுப்புக.
2. பெயர், முகவரி, வயது இவற்றைவிட அறிந்த பாஷைகள், விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள், மற்றும் திறமைகள் ஆண், பெண் இருபாலாரும் கடிதம் எழுதலாமா என்ற விபரங்களை 25 சொற்களுக்கு மேற்படாது எழுதி அனுப்பவும்.
3. தோழர் தோழர்களுக்கும், தோழியர் தோழியர்களுக்குமே எழுதலாம். ஆனல் இருபாலாரும் எழுதலாம் எனக் குறிப்பிடின் எவரும் எழுதலாம்.
4. வயதுக் கட்டுப்பாடின்றி உலகத்தின் எப்பகுதியிலுள்ளவரும் சேரலாம்.
5. தங்கள் புகைப்படங்களை இப்பகுதியில் வெளியிட விரும்புகிறவர்கள் புளக் (Block) அனுப்பவேண்டும். புளக் இல்லாவிடில் புளக்செய்ய புகைப்படத்துடன் ரூ. 7-50 அனுப்பவேண்டும்.

**வெற்றிமணி, முள்ளியவளை, இலங்கை.**

# வெற்றிமணி மாணவர் மன்றம்

மாணவர் மன்றத்தில் 22 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சேரலாம். பாடசாலையிற் படிப்பவர்கள் வயதுக் கட்டுப்பாடின்றிச் சேரலாம். விண்ணப்பத்துடன் 50சத முத்திரை அல்லது போஸ்ரல் ஆடர் பிரவேசக் கட்டணமாக அனுப்பவேண்டும். தமிழகத்திலுள்ளவர்கள் வெற்றிமணியிலுள்ள தமிழகப் பிரதிநிதியின் முகவரிக்கு அனுப்புக.

## அங்கத்தவர் விண்ணப்பப் பத்திரம்

அன்புள்ள மணி மாமாவுக்கு,

மாணவர் மன்றத்தில் என்னை அங்கத்தவராகச் சேர்க்கவும்.

செல்வன் / செல்வி ..............................

பாடசாலை முகவரி ..............................

வீட்டு முகவரி ..............................

பிறந்த திகதி .............. வயது .............. வகுப்பு ..............

கடிதத்தொடர்பு ஆண், பெண் இருபாலாரும்:

.............................. ..............................

ஆசிரியர் / பெற்றூர் கையொப்பம் கையொப்பம்

இலங்கையில் செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது Q.B.1338

**QUALIFIED OPTICIANS**

*Visit*

**MOHANLAL. C. VASA**

No. 207, Second Cross Street,

**COLOMBO. 11.**

*Telegrams:* VASOPTICO    *Telephone:* 21631

---

கண்களுக்குத் தேவையான

**சகலவிதமான கண்ணாடிகளுக்கும்**

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

**மோகன்லால் C. வாசா**

இல. 207, இரண்டாங்குறுக்குத் தெரு,

**கொழும்பு. 11.**

தொலைபேசி: 21631

இப்பத்திரிகை சக்தி அச்சகத்தினருக்காக, பொ. இராசரத்தினம் அவர்களால் முள்ளியவளை தண்ணீரூற்றிலுள்ள சக்தி அச்சகத்தில் 15-11-69 சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.